வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 29.09.2025 திங்கட்கிழமை | இதழ் : 272 | பக்கங்கள் : 08

### காற்றாலை திட்டத்துக்கு எதிராக

# மன்னாரில் இன்று பொது முடக்கம்!

## கண்டன பேரணிக்கும் அழைப்பு

மன்னார், செப்ரெம்பர் 29

**மன்னார் மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை பொது முடக்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. காற்றாலை திட்டத்துக்கு எதிராகவும் போராட்டக்காரர்கள்மீது பொலிஸார் நடத்திய தாக்குதலை கண்டித்துமே பொது முடக்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

போராட்டத்தின் 57 ஆவது நாளாக நேற்றைய தினம் முன்னெடுக்கப் பட்ட போராட்டத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

மக்கள் திங்கட்கிழமை (இன்று) அனைத்து செயல்பாடுகளையும் நிறுத்தவேண்டும். போக்குவரத்து சேவையை நிறுத்துவதுடன், வர்த்தக நிலையங்களை மூடி மாவட்டத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்து எங்கள் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டுகிறோம். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுவோரும் கடமைகளுக்கு செல்லாமல் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதேநேரம், முற்பகல் 10 மணிக்கு மன்னார் பொது

07

## இளம் ஆசிரியர் மர்ம மரணம்!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், செப். 29

இளம் ஆசிரியர் ஒருவர் அவர் வாடகைக்கு தங்கியிருந்த அறையிலிருந்து சடலமாக மீட்கப் பட்டார்.

கரவெட்டியை சேர்ந்த அ. சயேந்திரன் (வயது 30) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ். நகரிலுள்ள பிரபல

07

## வரம்பு கட்ட சென்றவர் சடலமாக மீட்பு

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், செப். 29

வயலுக்கு வரம்பு கட்டச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்.

அரியாலையை சேர்ந்த சின்னத்தம்பி ராஜபாரதி (வயது 60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

07

## நினைவுகூரல்களை செய்ய சுதந்திரம் வழங்கியுள்ளோம்


### நீதி அமைச்சர் ஹர்சன

ஜெனிவா, செப். 29

முன்னைய அரசாங்கங்களால் நினைவுகூரலுக்கான உரிமைமீது மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இருப்பினும் தமது அரசாங்கம் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களை முன்னிலைப்படுத்தாத வகையில் போரில் உயிரிழந்த அன்புக்குரியவர்களை நினைவுகூர முழுமையான சுதந்திரத்தை வழங்கியுள்ளது என்று நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

07

## விஜயின் பிரசார கூட்ட நெரிசல் பலி எண்ணிக்கை 40ஆக உயர்வு



சென்னை, செப். 29

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜயின் கரூர் பிரசார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே, இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரிக்க அமைக்கப்பட்ட தனி நபர் விசாரணை ஆணையத்தின் தலைவரான ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் நேற்றைய தினம் விசாரணையை ஆரம்பித்துள்ளார்.

முன்னதாக, கரூர் - வேலுசாமிபுரத்தில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நேற்றுமுன்தினம் இரவு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

07

## போராட்டத்தின் பின்னால் அரசியல் காய்நகர்த்தல்!

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்


- மன்னாரை மீட்க எம்மை தவிர யாரும் இல்லை

யாழ்ப்பாணம், செப். 29

"போராட்டக்காரர்கள் மன்னாரை மீட்டெடுப்போம் என போராட்டத்தை கட்டவிழ்த்துவிட்டு இருக்கிறார்கள். மன்னாரை மீட்டெடுக்க எங்களைத் தவிர வேறு யாரும் கிடையாது. இந்தப் போராட்டத்தின் பின்னால் ஓர் அரசியல் காய்நகர்த்தல் இருக்கிறது என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்கு

07



## மகிந்த, ரணில் சந்திப்பு!

கொழும்பு, செப். 29

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் தங்காலையில் உள்ள கார்ல்டன் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதிகள் இருவரும் நீண்டநேரம் பேசினர் என்று தெரிய வருகிறது.

முன்னாள் அமைச்சர்களான சாகல ரத்நாயக்க மற்றும் ரமேஷ் பத்திரண ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர் என்று

07

## இலங்கை தூதரகம், விஜயின் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, செப். 29

தமிழக வெற்றி கழகத்தின் தலைவரும் நடிகருமான விஜயின் வீட்டுக்கும் சென்னையிலுள்ள இலங்கை துணை தூதரகம், பிரித்தானியாவின் துணை தூதரகம் என்பவற்றுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளன.

மின் அஞ்சல்கள் மூலமே இந்த வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, சென்னை நீலாங்கரையிலுள்ள விஜயின் வீடு, நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கை துணைத் தூதரகம், ஆயிரம் விளக்கு பகுதியிலுள்ள பிரித்தானியா துணைத் தூதரகம் என்பவற்றில் நிபுணர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

07

## செம்மணியில் நேற்றும் உண்ணாவிரத போராட்டம்



யாழ்ப்பாணம், செப். 29

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச நீதி கோரிய உண்ணாவிரத போராட்டம் செம்மணியில் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

சுழற்சிமுறையில் நடைபெறும் இந்தப் போராட்டத்தில் நேற்றைய தினம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும்

07

## கிழக்கு மாகாணத்திலும் உண்ணாவிரத போராட்டம்

அக்கரைப்பற்று, செப். 29

தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி கோரி செம்மணியில் சுழற்சி முறையில் நடைபெறும் உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக கிழக்கு மாகாணத்திலும் போராட்டம் நடைபெற்று வருகிறது.

அம்பாறை - தம்பிலுவில் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாகவும் சுழற்சி முறையிலான இந்த உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

07

## ஐ. எஸ். பயங்கரவாத குற்றம்: இருவருக்கு இன்று தண்டனை

### இலங்கையிலும் அவர்களுக்கு தொடர்புகள்

சென்னை, செப். 29

ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்புக்காக ஆட்சேர்ப்பு, பிரசாரத்தில் ஈடுபட்ட கோவையைச் சேர்ந்த இருவரை குற்றவாளிகள் என இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரக விசேட நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இவர்கள் இருவரும் இலங்கை உட்பட பல நாடுகளில் உள்ள பயங்கரவாதிகளுடன் தொடர்பில் இருந்தமை விசாரணைகளில் உறுதிப்படுத்தப்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் போராட்டத்துக்கு ஆதரவாக வடமராட்சி கிழக்கில் ஆர்ப்பாட்டம்!




வடமராட்சி, செப். 29

மன்னார் காற்றாலை திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்தியோர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்தும் அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவும் வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டில் அமைதி வழி போராட்டம் நடைபெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "அழிக்காதே அழிக்காதே மன்னாரை அழிக்காதே", "வேண்டாம் வேண்டாம் காற்றாலை திட்டம் வேண்டாம்", "அள்ளாதே அள்ளாதே எமது மண்ணை அள்ளாதே", என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன், அவற்றைக் கோஷமாகவும் எழுப்பினர். (ஐ-05)





# 'விக்சித் பாரத் ஓட்டம்' யாழிலும் நடைபெற்றது

யாழ்ப்பாணம், செப். 29

இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் விக்சித் பாரத் ஓட்டம் 2025 நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் ஆரம்பமாகி மீண்டும் அதே இடத்தில் நிறைவடைந்தது.

உலகளாவிய ரீதியில் 150 இற்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வு இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தை கொண்டாடுவதோடு, சேவை, மனவொற்றுமை மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்து, உலகம் முழுவதும் சமூகங்களை இணைக்கும். இந்தியாவின் முன்னேற்றத்தையும் பண்பாட்டு மதிப்புகளையும் வெளிப்படுத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்றைய நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி கடறொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ஐ-05)

# ஞாயிற்றுக்கிழமைகளில் தரம் 9இற்கு உட்பட்ட தனியார் வகுப்புக்கும் தடை!

## யாழ். மாநகர சபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தரம் 9இற்கு உட்பட்ட மாணவர்களுக்கான தனியார் வகுப்புக்கள் நடத்தத் தடை விதிக்கப்பட வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் ஏற்கனவே, அறநெறி மாணவர்களின் நலன்கருதி இந்த விடயம் நடைமுறையில் உள்ளது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வகுப்புத் தடைக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் -

இவ்வாறு யாழ். மாநகர சபை உறுப்பினர் சுகிர்தராஜ் சரஸ்வதி பிரேரணை முன்வைத்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் நான்காவது மாத அமர்வு வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த அமர்விலேயே குறித்த பிரேரணையை அவர் முன்வைத்ததுடன், உரையாற்றியிருந்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகள் அதிகம் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படுகின்றநிலையில் தேவை ஏற்படின் உயர்தர வகுப்புகளுக்கும் விதிவிலக்கு அளிக்க முடியும்.

தரம் 9இற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக்கி, விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒரு நாளிலாவது மாணவர்கள் வீடுகளில் நின்று ஓய்வு எடுக்கவும் அவர்களது சுய சுத்தம் பேணவும் இது வசதியாக இருக்கும். ஒருநாள் கூட ஓய்வில்லாது மாணவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த விடயம் ஏற்கனவே யாழ். அரச அதிபரால் மாவட்ட மட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளபோதும் இது நடைமுறையில் இல்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார்.

இவரது பிரேரணைக்குச் சபையில் ஆதரவு கிடைக்கப்



பெற்ற நிலையில் விரைந்து இதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் ஏனைய உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் திருமதி ப. யோகேஸ்வரி, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் சு. கபிலன் ஆகியோர் இந்த விடயம் மிகவும் தேவைப்பாடு உடையது. இந்த விடயத்தை ஆளுநருக்கு அனுப்பி இதற்கான துணை விதிகள் உடனடியாக உருவாக்கப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்தனர். (ஐ-02)

# கைக்கூ கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு!

வடமராட்சி, செப். 29

கவிவேந்தர் பொன். சுகந்தனின் இருபது கவிதைத் தொகுதிகள் தொடராக வெளியிடப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வும் முதலாவது நூலான ஆலம் விதை என்னும் கைக்கூ கவிதை நூல் வெளியீடும் விஜய தசமி தினமான எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் கி.சுந்தவேள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா கலந்துகொள்ளவுள்ளார். வெளியீட்டுரையை பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை அதிபரும் கவிஞருமான சோ.பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார். (ஐ-02)

# புத்தூரில் முத்தமிழ் அரங்கம்



யாழ்ப்பாணம், செப். 29

புத்தூர் - மணல்பகுதி சிறீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய அறநெறி பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழாவை முன்னிட்டு முத்தமிழ் அரங்கம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வீனஸ் விளையாட்டுக்கழக அரங்கில் அறநெறி பாடசாலையின் பொறுப்பாசிரியரான மு. இராஜவரோதயம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலகத்தின் இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி. மகிந்தினி விஜயகுமார் கலந்துகொண்டார்.

நிகழ்வின் சிறப்பம்சமாக அறநெறி மாணவர்களின் தெய்வீக இசை, சிறுவர் நடனம், கோலாட்டம், திருக்குறள் ஓதுதல், "மண்ணுக்குள் மறையுண்டுபோனவை மறுபடியும் உயிர்பெறவேண்டும்" எனும் தலைப்பிலான கவியரங்கம், "புதியதோர் உலகம் செய்வோம்" எனும் சிறுவர் நாடகம், காத்தவராயன் சிந்துநடைக் கூத்து என்பவை நடைபெற்றன. (ஐ-05)

# மதகுருக்கள், மக்கள் மீதான தாக்குதலை கண்டிக்கிறோம்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், செப். 29

மன்னார் காற்றாலைக்கு எதிராகப் போராடிய அப்பாவி பொதுமக்களையும் வணக்கத்துக்குரிய மதகுருக்களையும் பொலிஸார் இழுத்துச் சென்று அராஜகம் புரிந்திருக்கிறார்கள். இதனை வன்மையாக கண்டிக்கிறோம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

"மன்னார் மக்கள் காற்றாலையை நிரந்தரமாக அமைக்க வேண்டாம் எனக் கூறி போராடுகின்றார்கள். காற்றாலையை அமைப்பதாக இருந்தால் மக்கள் நடமாட்டம் இல்லாத சன நெரிசல் இல்லாத இடங்களில் அமைக்குமாறுதான் கூறுகிறார்கள்.

ஆனால், மக்களின் உணர்வுளை புரியாத அநுர குமார திஸநாயக்க அரசாங்கம் மக்களைத் தாக்கியிருக்கிறது. இவ்வாறு தாக்குதல்களுக்கு உள்ளானவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

அநுர குமார திஸநாயக்கவிடம் நாங்கள் கேட்கின்ற கேள்வி, இதே மாதிரி பொலிஸார் பௌத்த மதகுரு மீது தாக்குதல் நடத்துவார்களா? அவ்வாறு தாக்குதல் நடத்திவிட்டு அவர்களால் கடமையில் இருக்க முடியுமா? உங்களுக்கு சைவ சமயத்தவர்களும் கிறிஸ்தவ சமயத்தவர்களும் இழக்காரம் ஆகிவிட்டார்களா?

மன்னார் மக்களுடைய உணர்வுகளோடு நாங்கள் சேர்ந்து நிற்கிறோம். மக்களுடைய கோரிக்கைகள் ஈடேறும் வரைக்கும் நாங்கள் அவர்களுடன் இணைந்திருப்போம். எங்களைப் பொறுத்தவரை இது ஓர் அராஜகம் - வன்முறை இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் - என்றார். (ஐ-05)

# இந்திய மீனவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 29

இலங்கை - நெடுந்தீவு அருகே மீன்பிடியில் ஈடுபட்ட காரைக்கால் மீனவர்கள் 12 பேர் இலங்கை கடற்படையினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர். அத்துடன், படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கைதான இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவானின் வாசஸ்தலத்தில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, கைதான அனைவரையும் நாளை மறுதினம் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
29.09.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## நீதி

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலை கடற்கரைக்கு அருகைமையில் குறிப்பாக, காந்தி சிலைக்கு அருகில் ஐந்து தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டனர். 2005இல் மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மேற்படி கொலை இடம்பெற்றது. விக்கிப்பீடியாவின் ஆவணப்படுத்தலின்படி, இந்தக் கொலைகளை விசேட அதிரடிப் படையினரே மேற்கொண்டிருக்கின்றனர். விசேட அதிரடிப் படையினரே இதற்கான பொறுப்பு என்று அப்போது ஜனாதிபதியின் ஆலோசகராக இருந்த பஸில் ராஜபக்ஷ அப்போது அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபட் ஏ. பிளேக்கிடம் தெரிவித்தாரெனவும் தகவல்கள் பதிவாகியிருக்கின்றன.

இது தொடர்பில், ஐ. நா. மனித உரிமைகள் பேரவை உள்ளடங்கலாக பல்வேறு சர்வதேச அரங்குகளிலும் பேசப்பட்டிருக்கிறது. குறித்த ஐந்து மாணவர்களில் ஒருவரின் தந்தையான மருத்துவர் மனோகரன் பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் தலைமைக் காரியாலயங்களுக்கும் நேரடியாகச் சென்று நீதிக்காக முறையிட்டிருந்தார். மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளின்போதும் அங்கு சென்று முறையிட்டிருந்தார்.

இந்த நிலையில், மூப்பின் காரணமாக சில தினங்களுக்கு முன்னர் அவர் உயிரிழந்தார். தான் வாழும் காலத்தில் தனது மகனுக்கு நடந்த அநீதிக்கு எதிராக நீதி நிலைநாட்டப்படும் என்னும் நம்பிக்கையோடு இருந்தவர் - அதனை காணாமலேயே உலக வாழ்விலிருந்து விடை பெற்றுவிட்டார். "அண்ணன் எப்போது போவான் திண்ணை எப்போது காலியாகும்" என்பதுபோல், மனோகரனின் இறப்பைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டத்தில் அரசியல்வாதிகள் உரையாற்றுகின்றனர். இறுதியில் தமிழ் அரசியல் தலைமைகளின் சாதனை என்னவென்றால் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றியது மட்டும்தான்.

யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்களில் தங்களின் பிள்ளைகளை, கணவனை, உறவினர்களைத் தேடிய பலர் இறந்துவிட்டனர். ஒரு கட்டத்தில் இன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடிக் கொண்டிருக்கும் அவர்களுடைய உறவினர்கள் பலரும் இறந்துவிடுவர். ஒரு கட்டத்தில் பேசுவதற்குக்கூட எவரும் இருக்கப் போவதில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நிகழ்வுகளில் பங்குகொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஏதேவொரு வகையில் நேரடி உறவிர்கள்தான்.

பொதுவான மக்கள் இவ்வாறான நிகழ்வுகளில் பங்குகொள்வதில்லை. பாதிக்கப்பட்டவர்களே தமது பாதிப்புக்காக வீதிக்கு வரும் நிலைமையே தொடர்கிறது. அதிலும், சோர்வுகள் ஏற்பட்டுவிட்டன. ஏனெனில், கடந்த பதினாறு வருட கால நிகழ்வுகள் நம்பிக்கையளிக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. பதினாறு வருடங்களுக்குப் பின்னர் அரசாங்கம் உள்ளக பொறிமுறையின் ஊடாக விடயங்களை முன்னெடுக்கும் என்று நம்புவதாகக் கூறும் நிலையில்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இருக்கிறது.

இன்றைய உலக அரசியல் சூழலில், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்பது எட்டாக் கனிதான். ஏனெனில், அந்தளவுக்கு உலக அரசியல் அதிகாரத்துவ போட்டிக்குள் சிக்கியிருக்கிறது. இந்தப் போட்டியில் பல முகாம்கள் உருவாகியிருக்கின்றன. ஒவ்வொரு முகாமும் தங்களுடைய முகாமுக்குள் இருப்பவர்களை நியாயப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. இந்த நிலையில் மனித உரிமைகள், ஜனநாயகம் என்னும் கோஷங்கள் அனைவருக்குமான கோஷமாக இல்லை. இந்த நிலையில்தான் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி என்பதும் கானல்நீராக மறைந்து கொண்டே செல்கிறது.

# 450 அரச நிறுவனங்களின் ஊழலை ஆராய்வதற்கு கோப் குழு தீர்மானம்

கொழும்பு, செப். 29

450 அரச நிறுவனங்களின் செயல்திறன் குறித்து விரிவான ஆய்வை மேற்கொள்வதற்கு கோப் எனப்படும் அரசாங்கம் பொறுப்பு, முயற்சிகள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, கணக்காய்வு அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்த விரிவான தகவல்களைப் பெறுவதற்காக, அவற்றில் 450 நிறுவனங்களிடமிருந்து எழுத்துபூர்வ அறிக்கைகளைக் கோருவதற்கு கோப் குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர, ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் அதிக அளவில் உள்ள நிறுவனங்கள் விசாரணைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன - என்றார்.

ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் அதிக அளவில் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள் மிக விரைவில் குழுவின் முன் அழைக்கப்படுவார்கள் என்றும், அந்த நிறுவனங்களின் ஊழல்கள் விசாரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அந்த விசாரணைகளின் போது தெளிவாக வெளிப்படும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளை, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு, கோப் குழு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

(அ)

# விசேட தேவையுடைய மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர வாய்ப்பு

கொழும்பு, செப். 29

விசேட தேவையுடைய மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்குச் சேர்ப்பதற்கான கொள்கை வரைவு தற்போது தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற உயர்கல்வித் தொடர்பான துணைக்குழு மற்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கு இடையேயான கலந்துரையாடலின்போதே ஆணைக்குழு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பல்கலைக் கழகங்கள் தொடர்பான மேலும் சில முக்கிய விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதாக பாராளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, வெளிவாரி பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கு தொழிற்சந்தையில் உரிய இடம் கிடைக்கச் செய்தல், வெளிவாரி பட்டங்களின் தரம் மற்றும் அவற்றில் நிலையைத் தரமான முறையில் பராமரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், தேசிய மட்டத்தில் வெற்றிகளை பெறும் மாணவர்களுக்கு பல்கலைக் கழகக் கல்வியை வழங்குவதற்கான திட்டமொன்றை தயாரிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக பாராளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## அரச வருமானம் பெரும் உயர்வு

கொழும்பு, செப். 29

இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் வரையிலான காலப் பகுதியில் அரசாங்கத்தின் வருமானம் மற்றும் மானியங்கள் கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 3301.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் குறித்த காலப்பகுதியில் இது 2,565.9 பில்லியனாக பதிவாகியிருந்ததாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கடந்த 8 மாதங்களில், மொத்த செலவுகள் மற்றும் நிகர கடன் 3,476.9 பில்லியனில் இருந்து 3,712.5 பில்லியனாக அதிகரித்துள்ளது.

## பெண் பிரதிநிதித்துவம் தொடர்பில் அரசியல் கட்சிகள் ஆர்வம் குறைவு!

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

கொழும்பு, செப். 29

10 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான 26 பெண் பிரதிநிதிகளின் பெயர்கள் இன்னும் அரசியல் கட்சிகளால் தேர்தல் அலுவலகத்துக்கு அனுப்பப்படவில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, அந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான 25 வீத பெண் பிரதி நிதித்துவம் இன்னும் அடையப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளில் அரசியல் பன்மைத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து நடைபெற்ற கருத்தரங்கிலேயே தேர்தல் ஆணையாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.


பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக சில அரசியல் கட்சிகள் காட்டும் மேலோட்டமான ஆர்வம், கட்சிகளுக்குள் பிரதிபலிக்கவில்லை என்றும் பெண் பிரதிநிதிகளைப் பரிந்துரைத்து அனுப்புவதில் ஏற்படும் தாமதம் இதற்குக் காரணம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**

பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த வேலைகள் முடியும் நாள்.

**மிதுனம்**

எதிர்பாராத பணவ்ரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**கடகம்**

குடும்பத்தினருடன் உங்களின் நேரத்தை செலவழிப்பீர்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அன்புத் தொல்லை குறையும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**

தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதிதாக ஆடை வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள்.

**தனுசு**

கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். வாகனத்தில் கவனம் தேவை.

**மகரம்**

உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகும் நபரால் பயனடைவீர்கள். சாதிக்கும் நாள்.

**கும்பம்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**மீனம்**

உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளால் மதிப்பு கூடும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

# எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 12 பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 29

எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை இந்திய மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

புதுச்சேரி மீனவர்கள் 12 பேரே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் இருந்து மீன்பிடிக்க வந்து நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு இழுவைப் படகையும் அதிலிருந்த 12 பேரையும் கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு சென்றனர்.

முதற்கட்ட விசாரணையை முடித்துக் கொண்டு அந்த மீனவர்கள் 12 பேரையும் படகுடன் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க உள்ளதாக கடற்படையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

(எ-03)

# எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற மனநிலையில் மாற்றம் வேண்டும்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற மக்களின் மனநிலையில் மாற்றம் வேண்டும். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு பேரம் பேசி எமக்குத் தேவையானதை நாம் பெற்றுக்கொள்ள வேண் டும். இதனூடாக எமது மாகாண மக்களின் வாழ்க் கைத்தரம் உயரவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளு நர் நா. வேதநாயகன் தெரிவித் தார்.

யாழில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர் மேலும் கூறுகையில், "இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு எமது மாகாணம் 4 சதவீதத்தையே பங்களிப்புச் செய்கின்றது. இதை 10 அல்லது அதைவிடக் கூடியளவு உயர்த்துவதற்குத் தேவையான வளம் எமது மாகாணத்தில் இருக்கின்றது. நாங்கள் எங்கள் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவது மற்றும் ஏற்றுமதியை மேற்கொள்வது என்ற இரண்டு முறைமைகளின் ஊடாகவும் தேசிய உற்பத்திக்கான எங்களின் பங்களிப்பை பெருமளவு அதிகரித்துக் கொள்ள முடியும்.

போருக்கு முன்னர் இருந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவும் அழிவடைந்து விட்டன. இன்னமும் 21 ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதன் ஊடாக மாற்றுப் பயிர்ச் செய்கையை விவசாயிகளிடம் ஊக்குவிக்க முடியும்.

எமது மாகாண விவசாயிகள் திறமையானவர்கள். எந்தவொரு பயிர் வகையையும் வேண்டியளவில் உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை உடையவர்கள்.

ஆனால், விளைபொருட்களுக்கான விலைத் தளம்பல் அவர்களைப் பாதிக்கின்றது. நிலையான விலை கிடைக்குமாக இருந்தால் அவர்கள் இன்னமும் உற்சாகமாக பயிர்ச் செய்கையில் ஈடுபடுவார்கள். அதற்கு நான் முன்னரே குறிப்பிட்டதைப்போன்று பெறுமதி சேர் பொருட்களாக மாற்றுதல் மற்றும் ஏற்றுமதியை மேற்கொள்ள வேண்டும். இந்த அரங்கிலுள்ள தொழில்முனைவோர் அதைக் கவனத்திலெடுக்க வேண்டும்.

எமது மக்கள் எல்லாவற்றையும் எதிர்ப்பு மனநிலையில் அணுகக் கூடாது. நான் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த காலத்தில், கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. எமது மக்கள் அதனையும் எதிர்த்தார்கள். சுத்திகரிக்கப்பட்ட பின்னர் செறிவு கூடிய நீர் கடலுக்குச் செல்லும்போது மீன் வளம் அழிவடையும் என்றார்கள். ஆனால், இன்று அந்தப் பகுதியில் அதிகளவு மீன்கள் பிடிபடுவதாகக் கூறுகின்றார்கள். அதைப்போல பளையில் காற்றாலை அமைக்கப்பட்டபோது மழை வராது என்று சொன்னார்கள்.

ஆனால், இன்று அவ்வாறான நிலைமை இல்லை. எனவே, எந்தவொரு விடயத்தையும் எதிர்ப்பது என்ற மனநிலையில் சிந்திக்காமல் அந்தத் திட்டங்கள் ஊடாக எங்களுக்கு என்ன நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற கோணத்தில் சிந்திக்கவேண்டும்"- என்றார். (எ-03)



யாழ்ப்பாணம் வர்த்தக கைத் தொழில்துறை மன்றத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் யாழ்ப்பாணம் செல்வா பலஸில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

# வீதிப் புனரமைப்புக்கு அரசு ஒதுக்கிய ரூ.46 மில்லியன் நிதி திருப்பியனுப்பட்டது

வவுனியா, செப். 29

அரசாங்கத்தால் கிராமப்புற வீதிப் புனரமைப்புக்காக செட்டிக்குளம் பிரதேச சபைக்கு அனுப்பிய 46 மில்லியன் ரூபாய் நிதியை பிரதேச சபை திருப்பி அனுப்பியுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா நகரில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்துக்கு கடந்த வரவு - செலவுத்திட்டத்திலே வீதிகளைப் புனரமைப்பதற்காக 1200 மில்லியன் ரூபாயும் அதனை விட மேலதிகமாக 113 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் எங்களின் வேண்டு கோளுக்கு அமைவாக 200 மில்லியன் ரூபாய் கிராமப்புற வீதிகளைப் புனரமைப்பதற்காக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிதிகள் அனைத்துமே பிரதேச சபைகளுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இறுதியாக கிடைக்கப் பெற்ற 200 மில்லியன் ரூபாய் நிதி கிராமப்புற வீதிகளை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த நிதியானது வவுனியா மாவட்டத்திலே காணப்படுகின்ற அனைத்து பிரதேச சபைகளுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையிலே செட்டிக் குளம் பிரதேச சபைக்கு மாவட்ட செயலகத்தின் ஊடாக 46 வீதிகளை புனரமைப்பதற்காக 46 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், தவிசாளர் குறித்த நிதியை ஏற்க முடியாது என்ற ரீதியிலும் இவ்வேலைத்திட்டத்தை செய்ய முடியாது என்ற ரீதியிலும் பிரதேச செயலகத்துக்கு அறிவித்திருந்தார் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் காற்றாலை விவகாரத்தில் அரசு முறையற்று செயல்பட்டுள்ளது

## ஐக்கிய மக்கள் சக்தி கண்டனம்

கொழும்பு, செப். 29

மன்னார் காற்றாலை விவகாரத்தில் அரசாங்கம் முறையற்ற வகையில் செயல்பட்டுள்ளது. அந்தப் பிரதேச மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள், மதத்தலைவர் கள்மீது தாக்குதல் நடத்தியமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மன்னார் காற்றாலைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள்மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில், அதானி நிறுவனத்துடனான மன்னார் காற்றாலை திட்டத்தை கடந்த அரசாங்கம் கைச்சாத்திட்டது. இந்த கருத்திட்டத்தில் இருந்து விலகுவதாக தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் வடக்கு மாகாண மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது. இந்த கருத்திட்டத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று சூழலியலாளர்கள் மற்றும் சிவில் தரப்பினர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள்.

இலங்கையின் மிகபெரிய தீவாகக் கருதப்படும் மன்னார் தீவின் இயற்கை அம்சங்களை பாதுகாக்க வேண்டும். மன்னார் காற்றாலை கருத்திட்டத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பில் வெளிப்படையான வகையில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால், எவ்விதமான பேச்சுகளுமின்றி கருத்திட்டத்தின் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னார் காற்றாலை விவகாரத்தில் அரசாங்கம் முறையற்ற வகையில் செயல்பட்டுள்ளது. அந்த பிரதேச மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள், மதத் தலைவர் கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையாக கண்டித்தக்கது - என்றார். (ஐ)

# சுகாதாரத் துறையை மேம்படுத்த நடவடிக்கை

கொழும்பு, செப். 29

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்பில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கு 7 கப் ரக வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவால் சுகாதார மருத்துவமனை அதிகாரி பணிமனைகளுக்கு நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன. சுகாதாரத்துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த கப் ரக வண்டிகளின் விலை தலா 2 கோடியே 20 இலட்சம் ரூபாயாகும்.

மத்திய, வட மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சுகாதார சேவைகளுக்காக 45 கப் ரக வண்டிகளை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அந்த வாகனங்களில் கடந்த 2022 ஜனவரியில் 38 வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# எப்போதும் இல்லாத உச்சத்தில் இந்தியா - இலங்கை உறவுகள்!

புதுடில்லி, செப். 29

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் ஜனாதிபதி “முன்னெப்போதும் இல்லாத உச்சத்தை” எட்டியுள்ளதாக உயர்ஸ்தானிகர் மஹிஷினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

டில்லியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்தி மீட்பு, மாற்றத்தின் பாதையில் சிறப்பாக செல்கிறது. இந்தப் பயணத்தில், இந்தியாவுடன் ஒத்துழைப்பதற்கான மகத்தான வாய்ப்புகளை காணுகிறோம்

ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க தெரிவான பின்னர் அவர் இந்தியாவுக்கு வந்ததிலிருந்தும் அதற்கு சில மாதங்களுக்குப் பிறகு பிரதமர் மோடி இலங்கைக்கு சென்றதிலிருந்தும் இலங்கை - இந்திய உறவுகள் முன்னெப்போதும் இல்லாத சிறந்த நிலையை எட்டியுள்ளன.

இலங்கையும் இந்தியாவும் தனித்துவமான வரலாற்று உறவுகளை பகிர்ந்து கொள்கின்றன. மக்களுக்கு இடையேயான உறவுகள் வரலாறு, கலாசாரம், புவியியல் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றில் ஆழமாக வேரூன்றியுள்ளன. மேலும், இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்கிறது. இந்தியாவை மிக அருகில் உள்ள அண்டைய நாடாக மட்டுமல்லாமல், மிகவும் இயல்பான வர்த்தக பங்காளராகவும் காண்கிறோம் - என்றார். (ஐ)

# 2025இல் விபத்துகளில் 2,037 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 29

நடப்பு ஆண்டின் இது வரையான காலப் பகுதிக்குள் ஆயிரத்து 916 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகளின்போது 2 ஆயிரத்து 37 பேர் உயிரிழந்தனர். 3 ஆயிரத்து 787 பேர் காயமடைந்துள்ளனர்.

பொதுமக்களும் வாகன சாரதிகளும் வீதி விதிமுறைகளை கடைப்பிடித்து பொறுப்புணர்வுடன் செயல்படுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ)

# பேருந்து மோதி மூதாட்டி பலி!

கொழும்பு, செப். 29

நடந்து சென்றவரை பேருந்து மோதியதில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

காலி - ரத்கம சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது. இதில், காயமடைந்த பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் 77 வயதான மூதாட்டியே உயிரிழந்தார்.

ரத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலத்திரனியல் வீசா ஒப்பந்தம் ஒப்பந்த அறிக்கையை வெளியிடுக

கொழும்பு, செப். 29

அரசாங்கத்தின் இலத்திரனியல் வீசா ஒப்பந்தங்கள் குறித்த அறிக்கையை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

புதிய முறைமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்மீது நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் வரை பழைய முறையை மீட்டெடுக்க வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை விரைந்து நிறைவேற்றத் தவறியதால், நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் முன்னாள் குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டு பணிப்பாளர் ஹர்ச இலுக்பிட்டியவுக்கு நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

இதனையடுத்தே எதிர்க்கட்சிகளின் கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு 15 மாதங்கள் கடந்தும் அரசாங்கம் இன்னமும் ஒப்பந்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறியுள்ளனர். (ஐ)

# இஸ்ரேலிலிருந்து 12 இலங்கையர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, செப். 29

இஸ்ரேலில் இருந்து 12 இலங்கையர்கள் மனநல பிரச்னைகள், போதைப்பொருள் பாவனை பிரச்னைகள் காரணமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

மனநல பிரச்னைகள் அல்லது போதைப்பொருள் பாவனை பிரச்னைகள் உள்ளவர்களை வெளிநாட்டு வேலைக்காக அனுப்புவதைத் தவிர்க்குமாறு தொடர்புடைய குடும்பங்களை இலங்கைத் தூதரகம் வலியுறுத்துவதாகவும் தூதுவர் நிமல் பண்டார மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேலில் கட்டுமான வேலைகளில் ஈடுபட்டிருந்த மற்றும் பொருத்தமற்ற நடத்தையை வெளிப்படுத்திய மேலும், இரு இலங்கையர்கள், கடந்த வியாழக்கிழமை இஸ்ரேலிலிருந்து கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# திறனற்ற வீட்டு உபகரணங்களே மின் கட்டண உயர்வுக்கு காரணம்

கொழும்பு, செப். 29

நாட்டில் அதிகரித்து வரும் மின்சார கட்டணங்களுக்குத் திறனற்ற வீட்டு உபகரணங்களே முக்கிய காரணம் என்று நிலைபெறுதகு வலு அதிகார சபை எச்சரித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போது அதன் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

10 ஆண்டுகளுக்கும் மேலான குளிர்சாதன பெட்டிகள், குளிரூட்டி ஆகியவை அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துவதாக ஆய்வுகள் காட்டுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் “மேல் மாகாணத்தில் மாத்திரம் மூன்றில் ஒரு குளிர்சாதனப் பெட்டி பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையில் உள்ளன.

இதன் விளைவாக மாதத்துக்குக் கூடுதலாக 100 அலகுகள் அல்லது அதற்கு மேற்பட்டவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

“குறைந்த செயல்திறன் கொண்ட சாதனங்களின் இறக்குமதியை அரசாங்கம் ஏற்கனவே கட்டுப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் குளிரூட்டிகள் மீதான சட்டத்தைக் கடுமையாக்கும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# கேபிள் கார் விபத்து பலி எண்ணிக்கை 8ஆக அதிகரித்தது

கொழும்பு, செப். 29

குருநாகலில் கேபிள் கார் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி மெல்சிறிபுர பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் 7 பிக்குகள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இதில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 41 வயதுடைய பௌத்த பிக்கு ஒருவரே நேற்று காலை உயிரிழந்தார் என்று தெரிய வருகிறது.

இதேவேளை,

இந்த விபத் தில் உயிரிழந்த 7 பிக்குகளின் உடல்களும் மெல்சிறிபுர - பன் சியகம பொது மயானத்தில் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# துறைமுக நகர வணிகம் புதிய வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, செப். 29

சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டுதல்களின்படி, நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, கொழும்பு துறைமுக நகரத்தில் (போர்ட் சிற்றி) முதலீடு செய்யும் வணிகங்களுக்கு வழங்கப்படும் வரி விலக்குகள் - சலுகைகளின் கால அளவு தொடர்பில் ஒரு வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

இந்தத் திருத்தம் “மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகங்கள்”, ”மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகங்கள்” ஆகிய இரண்டுக்கும் பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது, 2023 ஒகஸ்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் கடைசி விதிமுறைகளில் வழங்கப்பட்ட சலுகைகளில் குறைப்பை குறிக்கிறது.

2023 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விதிமுறைகள் கடந்த மாதம் காலாவதியாகிவிட்டன.

இதையடுத்தே, நிதி மற்றும் வரி சலுகைகளை உள்ளடக்கிய ஒரு புதிய வர்த்தமானி கடந்த வாரம் வெளியிடப்பட்டது. 2025 விதிமுறைகள் 4 குழுக்களை அறிமுகப்படுத்துகின்றன.

இதில் “ஏ” விதிமுறை, குறைந்தபட்சம் 300 வேலை வாய்ப்புகளுடன் 10 கோடி அமெரிக்க டொலர் முதலீட்டைக் கட்டாயமாக்குகிறது. “பி” விதிமுறை 50 கோடி அமெரிக்க டொலர் முதலீட்டையும் 300 வேலை வாய்ப்புகளையும் கட்டாயமாக்குகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# முத்துநகர் விவசாயிகளின் போராட்டம் தொடர்கிறது



திருகோணமலை, செப். 29

முத்துநகர் விவசாயிகள் நேற்று 12ஆவது நாளாக சத்தியாக்கிரக போராட்டத்தை தொடர்ந்தனர்.

திருகோணமலை மாவட்ட செயலகம் முன் இந்தப் போராட்டம் தொடர்கிறது.

கடந்த வாரம் கொழும்பில் பிரதமரை சந்தித்த போது பத்து நாட்களுக்குள் தீர்வு வழங்குவதாக கூறினார். பிரதமரின் காலக்கெடு முடிய இன்னும் 05 நாட்களே உள்ளன. இந்த நிலையில், திருகோணமலை வளங்களை சூரையாடுவதை நிறுத்து போன்ற பல வாசகங்களை ஏந்தியவாறு சத்தியாக் கிரகப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த விவசாயிகள், கடந்த 53 வருடங்களாக பரம்பரை பரம்பரையாக செய்து வந்த எங்கள் விவசாய பூமியை எங்களுக்கு வழங்குங்கள்.

இந்திய கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கப்பட்ட விளை நிலங்களை மீளக்கொடுங்கள் என்று கோரிக்கை விடுத்தோம். பிரதமர் 10 நாட்கள் அவகாசம் கொடுத்த நிலையில் இன்னும் 5 நாட்களே மீதமுள்ளன. நல்ல தொரு தீர்வை பிரதமர் எமக்கு வழங்குவார் என எதிர்பார்க்கிறோம்- என்றனர்.(எ-12)

# நுவரெலியா, அம்பாறையில் கடும் மழைக்கு வாய்ப்பு

நுவரெலியா, செப். 29

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் சில இடங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு 40 - 50 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

பலத்த காற்றால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களை வளிமண்ட லவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, காலி முதல் மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும் சிலாபம் முதல் மன்னார், காங்கேசன்துறை மற்றும் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையிலுமான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு சுமார் 50 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்.

அத்துடன் காலி முதல் மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும் சிலாபம் முதல் மன்னார், காங்கேசன்துறை மற்றும் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையிலும் உள்ள கரையோரத்துக்கு அப்பாலான கடற்பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படும்.

எனவே, இந்தப் பகுதிகளுக்கு செல்லும் மீனவர்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# போக்குவரத்து விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள்

மட்டக்களப்பு, செப். 29

சர்வதேச சிறுவர் தின வாரத்தின் ஓரங்கமாக பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனச் சாரதிகளுக்கான போக்குவரத்து பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டல், துண்டுப்பிரசுரம் வழங்கல் மற்றும் ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரதான பஸ் தரிப்பிடம், பொதுச்சந்தை மற்றும் களுவாஞ் சிக்குடி ஆதார மருத்துவமனை போன்ற இடங்களில் நடைபெற்றது.

"உலகை வழிநடத்த - அன்புடன் போஷியுங்கள்" எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படும் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை சர்வதேச சிறுவர் தின வாரமாக பிரகடனப்படுத்தி பல நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

# சிறுவர்கள் பாதுகாப்பு குறித்து கல்முனையில் விழிப்புணர்வு

கல்முனை, செப். 29

சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களின் பாதுகாப்பு நலன் மற்றும் அவர்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு பிரதேச செயலாளர் ரி. எம். எம். அன்சார் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளின் படி கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதேச செயலக முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆர். சித்தி றகுமா ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெனிதா மோகன், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.கே. காமிலாவும்மா, உளவளதுணை உத்தியோகத்தர் திருமதி ஏ. ஜெஸ்மின் போன்றோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு கல்முனை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முன்பிள்ளை பாடசாலை ஆசிரியர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. (எ-01)

# ரயில் மோதி சிறுவன் பலி

கேகாலை, செப். 29

ரயில் மோதியதில் 14 வயதான சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

கேகாலை - ரம்புக்கனை - திஸ்மல்பொல ரயில் நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை சென்ற ரயிலில் நண்பர்களுடன் சென்ற சிறுவன் ரயில் நிலையத்தில் இறங்கி, அடுத்த ரயில் மேடைக்கு சென்றபோது பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற ரயில் மோதியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ரம்புக்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகிறனர். (ஐ)


# பொறியியல் துறையில் பேராசிரியராக பதவியுயர்வு

ஒலுவில், செப். 29

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பேராசிரியர் ஏ. எம். முஸாதிக், சிரேஷ்ட பேராசிரியராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

2024 நவம்பர் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் வழங்கப்பட்டுள்ள

இந்தப் பதவி உயர்வின் மூலம், அவர் இலங்கையில் பொறியியல் துறையில் சிரேஷ்ட பேராசிரியர் பதவியை அடைந்த முதலாவது முஸ்லிம் கல்வியியலாளர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.



எந்திரவியல் பொறியியல் துறையில் சிறப்பாகப் பணியாற்றும் முஸாதிக், பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் கற்பித்தல், ஆராய்ச்சி, நிர்வாகப் பொறுப்புகள் உள்ளிட்ட துறைகளில் தனது பங்களிப்புகளைச் செய்துள்ளார். (எ)

# வடிகான் மூடப்படாததால் மாணவர்கள் பெரும் சிரமம்



கல்முனை, செப். 29

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட நற்பிட்டிமுனை பகுதியில் உள்ள கழிவு நீர் வடிகான் உரிய முறையில் மூடப்படாமை காரணமாக மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக மாணவர்களின் பயன்பாட்டில் உள்ள நற்பிட்டிமுனை- 03 ஆலையடி வடக்கு வீதியில் உள்ள குறித்த வடிகானில் மூடி இன்மை காரணமாக அப்பகுதியில் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மேலும், இவ் வடிகான்கள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவர்களின் நிலைமை அறிந்து குறித்த வடிகானின் மூடிகளை நிர்மாணித்து உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.(எ-01)

# பூக்கன்றுகள் வழங்கிவைப்பு



கல்முனை, செப். 29

உலக மருந்தாளர் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார மருத்துவமனையில் பணிப்பாளர் ஜி. சுகுணன் தலைமையில் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, மருத்துவமனை சுற்றாடலை மெருகூட்டுவதற்காக 10,000 ரூபாய் பெறுமதி மிக்க பூக்கன்றுகள் பிரதான மருந்தாளரால் மருத்துவமனைக்கு பரிசளிக்கப்பட்டது.

மேலும், இந்தநிகழ்வில் மருத்துவமனையில் சிறுபிள்ளை மருத்துவ நிபுணர் ரொஷாந்த், மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் தாஹிரா சபியுதீன் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# தலைக்கவசம் அணியவில்லை; சம்மாந்துறையில் பலர் கைது!

சம்மாந்துறை, செப். 29



சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தலைக்கவசம் அணியாமை, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமை, போக்குவரத்து சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டுகளின் கீழ் பலரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர். அத்தோடு, மோட்டார் சைக்கிளையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் கைப்பற்றியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், சில மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில்...

விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டன பேரணி ஆரம்பமாகும். இந்தப் பேரணி மன்னார் பஜார் பகுதியை அடைந்து, அங்கு எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பப்படும். மதியம் 1.30 மணி வரை இந்தப் பேரணி நடைபெறும்.

இறுதியாக, ஜனாதிபதிக்கான கோரிக்கைகள் அடங்கிய மனு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (ஐ)

## இளம்...

பாடசாலை ஒன்றில் கற்பித்து வரும் அவர் குருநகர் பகுதியில் வாடகைக்கு அறை எடுத்துத் தங்கியிருந்துள்ளார். அவருக்குநேற்றுமுன்தினம் காலையும் மதியமும் அவரின் உறவினர் உணவு கொண்டுவந்து கொடுத்து விட்டுச் சென்றுள்ளார்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு உறவினர் அங்கு சென்றபோது ஆசிரியர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

அவரின் சடலம் உடற்கூராய்வு பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

## செம்மணியில்...

பங்கேற்றிருந்தனர்.

கடந்த 25ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் போராட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமைகள் மீறல், போர் குற்றங்கள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும், செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் அழைப்பின்பேரில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

நேற்று முன்தினம் விஜயின் பிரசாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்தனர். பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், அவரின் வீட்டுக்கும் இரண்டு இராஜதந்திர பணிமனைகளுக்கும் விடுக்கப்பட்ட இந்த மிரட்டல்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. (ஐ)

## ஐ.எஸ்....

பட்டுள்ளது. இந்த நிலையில், இவர்களுக்கான தண்டனை விவரங்கள் இன்றைய தினம் அறிவிக்கப்படவுள்ளன.

கடந்த 2019ஆம் ஆண்டு, கோவை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பயங்கரவாத அமைப்பு தொடர்பான பிரசாரங்கள் நடக்கின்றன என்று கிடைத்த தகவலின் அடிப்படையில், மொஹமட் அசாருதீன் (வயது 27), ஷேக் ஹிதயதுல்லா எனப்படும் பெரோஸ் கான் (35) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளையடுத்து, அவர்களுக்கு எதிராக தேசிய புலனாய்வு முகவரக விசேட நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அதில், “குற்றஞ்சாட்டப்பட்ட அசாருதீன், ஹிதயதுல்லா ஆகியோர் 2016ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதம் தொடர்பான பிரசாரத்தை மேற்கொண்டு வந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், அவர்களுடன் மேலும் சிலரும் இணைந்து சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான விவகாரங்களை சமூக வலைதளங்கள் வாயிலாகப் பகிர்ந்து, ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்” என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மகிந்த...

தெரியவருகிறது.

இதேவேளை, நேற்று மாலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் எம். பியுமான ஜீவன் தொண்டமான் உள்ளிட்டவர்களும் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடினர். (ஐ)

## வரம்பு...

இவர் நேற்று முன்தினம் காலை அரியாலை - நாவலடி பகுதியில் உள்ள தனது வயலுக்கு வரம்பு கட்டச் சென்றுள்ளார். இரவு வரை அவர் வீட்டுக்கு திரும்பவில்லை. இதனால், உறவினர்கள் அவரை தேடிச் சென்றனர்.

அப்போது, ஆலயம் ஒன்றுக்கு அருகிலுள்ள வெளியில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

அவரின் சடலம் உடல்கூராய்வுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விஜயின்...

முற்பகல் 10.30 மணிக்கு விஜய் பிரசாரம் செய்வதற்கு பொலிஸ் தரப்பில் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், நாமக் கல்லில் பிரசாரம் செய்துவிட்டு பிற்பகல் 03 மணிக்குப் பிறகுதான் விஜய் புறப்பட்டார்.

இதனிடையே, கரூர் வேலுசாமிபுரத்தில் பகல் 12 மணி முதல் தொண்டர்கள், ரசிகர்கள் கூடினர். கரூர் மாவட்ட எல்லையான வேலாயுதம்பாளையத்தில் இருந்தே கூட்டம் அதிகமாக இருந்ததால் பிரசார பேருந்து மிகவும் மெதுவாக நகர்ந்தது. இதனால் இரவு 7.15 மணிக்கே பிரசார இடத்துக்கு விஜயால் வர முடிந்தது.

அங்கு விஜய் பேச ஆரம்பித்தபோது, அவரது மைக் வேலை செய்யவில்லை. அவரின் பேச்சைக் கேட்பதற்காக பின்னால் இருப்பவர்கள் நெருக்கியடித்தபடி பிரசார பேருந்தை நோக்கி வந்தனர். இதனால் முன்னால் காத்திருந்தவர்கள் நெரிசலில் சிக்குண்டனர்.

விஜய் பேசிக் கொண்டிருந்தபோதே மூச்சுத் திணறி பலர் அடுத்தடுத்து மயங்கி விழத் தொடங்கினர். மேலும், அந்த பகுதியில் இருந்த மரக்கிளை உடைந்து விழுந்ததிலும் சிலர் காயமடைந்தனர். விஜய் பிரசாரத்தை முடித்து கிளம்பிய பின்னரே அவர்களை மீட்க முடிந்தது.

இதன்போது அம்புலன்ஸ் மூலம் மீட்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்டோர் கரூர் காந்தி கிராமத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் குழந்தைகள், சிறுவர்கள் பெண்கள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர். 50இற்கும் மேற்பட்டவர்கள் இன்னமும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இதனிடையே, கூட்டநெரிசலில் சிக்கி பாதிக்கப்பட்டவர்களை பார்வையிட விஜய் கரூர் மருத்துவமனைக்கு செல்ல அனுமதி கோரியிருந்தார் என்றும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழ்நாடு அரசாங்கம் 10 இலட்சம் (இந்திய) ரூபாய், தமிழக வெற்றிக் கழகம் 20 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியை அறிவித்துள்ளன. இதேநேரம் பல கட்சிகளும் நிவாரண நிதியை அறிவித்துள்ளன.

இதேநேரம், இந்தச் சம்பவத்துக்கு பல தரப்பினரும் அனுதாபம் தெரிவித்துள்ளதுடன், முன்னெச்சரிக்கையாக செயல்படாத விஜய், தமிழ்நாடு அரசாங்கத்தை கண்டித்துள்ளனர்.

இந்தியாவில் அரசியல் கட்சி ஒன்றின் கூட்ட நெரிசலில் சிக்கி இவ்வளவு தொகையானோர் உயிரிழந்தமை இதுவே முதன்முறையாகும். (ஐ)

# கேரதீவு விபத்தில் சிறுமி உயிரிழப்பு



தென்மராட்சி, செப். 29

கேரதீவில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

ஒரு மோட்டார் சைக்கிளில் நால்வர் பயணித்த நிலையில் நிலைதடுமாறி இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. இதில், சிறுமி உயிரிழந்தார். மற்றைய மூவரும் காயங்களுக்கு உள்ளாகினர்.

இதில், தென்மராட்சி - மந்துவிலை சேர்ந்த எஸ்.தனுஷ்கா என்ற சிறுமியே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கிழக்கு...

உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டிலேயே இந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்படுகிறது. இதில் காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## நினைவு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடருக்கு சமாந்தரமாக வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29ஆவது கூட்டம் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இதில், கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பணிமனையின் செயல்பாடுகள், மனிதப் புதைகுழி அகழ்வு, இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல்திட்ட நிராகரிப்பு, வலிந்து காணாமலாக்கப்படல் விவகாரம் தொடர்பில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் பயிற்சிகள், சத்துருக்கொண்டான் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலைகளின் மீள்விசாரணை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் குழுவில் அங்கம்வகிக்கும் அறிக்கையாளர்களால் கேள்விகள் எழுப்பப்பட்டன. இவற்றுக்கு பதிலளித்தபோதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கான அரசியல் தன்முனைப்பு தமது அரசாங்கத்திடம் உள்ளது. ஆகவே இதுபற்றி விசாரணைகள் உரியவாறு முன்னெடுக்கப்படும்.

இதேபோன்று, மனிதப்புதைகுழி அகழ்வைப் பொறுத்தமட்டில், அந்தப் பணிகளுக்காக போதியளவு நிதியை ஒதுக்கீடு செய்து, அவற்றை உரியவாறு முன்னெடுத்து வருகிறோம். இருப்பினும் நிபுணத்துவம் உள்ளிட்ட உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் சர்வதேச சமூகத்திடம் அதனைக் கோருவதற்குத் தயாராக இருக்கிறோம் - என்றார்.

இதேவேளை கடந்தகால அரசாங்கங்களால் நினைவுகூரலுக்கான உரிமை மீது மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இருப்பினும், எமது அரசாங்கம் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களை முன்னிலைப்படுத்தாத வகையில் போரில் உயிரிழந்த அன்புக்குரியவர்களை நினைவுகூர முழுமையான சுதந்திரத்தை வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், அந்த இடைவெளி எதிர்வருங்காலங்களில் மேலும் வலுப்படுத்தப்படும் என உறுதியளித்தார். (ஐ)

## போராட்டத்தின்...

கருத்து வெளியிடும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

காற்றாலை மின் திட்ட விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியுடன் உரிய தரப்புகளுடன் பேசப்பட்டது. தற்போது மின்சார கம்பங்களை நிறுவுவதற்குரிய குழிகள் தோண்டப்பட்டுள்ளன. அவற்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அதனை அமைப்பதற்கு விடுங்கள் என மக்களை நாம் கேட்டுக் கொள்கின்றோம். போராட்டத்தை கட்டவிழ்த்து விட்டவர்களை பார்க்கின்றபோது கடந்த காலத்திலே காற்றாலை மின் நிலையத்தை அமைக்கும்போது அதனைத் திறந்து வைக்கும் நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

அந்த நிறுவனங்களோடு ஏதோ ஒரு வகையில் கொடுக்கல் வாங்கல்களை செய்தவர்கள் இன்றைக்கு இந்த போராட்டத்தின் பின்னால் இருக்கிறார்கள். போராட்டக்காரர்கள் மன்னாரை மீட்டெடுப்போம் என போராட்டத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். மன்னாரை மீட்டெடுப்பதற்கு எங்களைத் தவிர வேறு யாரும் கிடையாது. மன்னாருக்கு இதன் மூலம் எந்தப் பாதிப்பும் இல்லை. மன்னாருக்கு அதிகளவான பாதிப்பை ஏற்படுத்துவது கனிய மணல் அகழ்வு. அதனை நாம் இப்போது நிறுத்தி இருக்கிறோம்.

இலங்கையில் இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட காற்றாலை மின் நிலையங்களை பாருங்கள் - அந்தப் பிரதேசங்களை பாருங்கள் - அந்தக் கடற் பகுதிகளை பாருங்கள் - அங்கே மீன் இனங்கள் வரவில்லையா? பறவை இனங்கள் வரவில்லையா? உயிரினங்கள் வரவில்லையா? இயற்கைக்கு எந்தவிதமான மாசு ஏற்பட்டிருக்கிறதா? என்பதை தேடி பாருங்கள். அவ்வாறு மாசு ஏற்பட்டிருந்தால் அவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டிருந்தால் அவை நிரூபிக்கப்படுமானால் நாங்களும் உங்களோடு சேர்ந்து போராடுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

கடந்த காலங்களில் மன்னாரில் காற்றாலை மின் நிலையங்கள் அமைக்கின்றபோது எதிர்ப்பு தெரிவிக்காதவர்கள் தற்போது எதிர்ப்பைத் தெரிவிப்பது இவர்களுக்கு பின்னால் ஓர் அரசியல் காய் நகர்த்தல் இருக்கிறது என்று நமக்கு புலப்படுகிறது. விஞ்ஞான ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் மக்களை பாதிக்கின்ற எந்த செயல் திட்டத்தையும் நாம் ஒரு போதும் செய்யமாட்டோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாமல் உட்பட 20 அரசியல்வாதிகளின் சொத்துகள் தொடர்பில் விசாரணை!

கொழும்பு, செப். 29

கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சு பதவிகளை வகித்த அமைச்சர்கள் உட்பட 20 அரசியல்வாதிகள் சட்டவிரோதமாகக் குவித்த சொத்துகள் தொடர்பில் குற்றப் புலனாய்வு துறை விசாரணைகளை தொடங்கியுள்ளது.

இதன்படி, நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்த்தன, மகிந்த அமரவீர, பியசேன கமகே, பவித்ரா வன்னியாராச்சி, வஜிர அபேவர்த்தன, துமிந்த திஸநாயக்க, எஸ். எம். சந்திரசேன, சாகல ரத்நாயக்க, மனுஷ நாணயக்கார, முன்னாள் துணை சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, திஸ்ஸ குட்டியாராச்சி, குருநாகல் முன்னாள் மேயர் துஷார சஞ்சீவ விதாரண உள்ளிட்ட 20 பேருக்கு எதிராகவே இந்த விசாரணைகள் நடைபெறவுள்ளன.

பல்வேறு பொது அமைப்புகள், தனிநபர்களால் குற்றப் புலனாய்வுத் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

மேலும் விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கொழும்பில் 30 பேர் கைது!

கொழும்பு, செப். 29

கொழும்பு மருதானையில் பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் 30 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த சிறப்பு நடவடிக்கையில், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட, பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 30 சந்தேக நபர்கள் கைதாகினர்.

இராணுவத்தின் ஆதரவுடன் குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சிறீ லங்கன் எயார்லைன்ஸின் வருமானம் 10 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 29

2025 - 2026 வரையான நிதி ஆண்டின் முதல் 5 மாதங்களில் சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பயணிகள் மூலமான வருமானம் 10 வீதத்தால் அதிகரித்துள்ளது.

தமது விமானங்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையும் 22 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் விமான சேவையின் செயல்திறன் 74 வீதமாக அதிகரித்துள்ளது. இது கடந்த வருடம் இது 69 வீதமாகப் பதிவாகியிருந்தது.

இயந்திர கோளாறால் நீண்ட காலமாக சேவையில் இருந்து நீக்கப்பட்ட 2 விமானங்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அடுத்த வருட ஆரம்பத்தில் மற்றுமொரு விமானம் பழுதுபார்க்கப்பட்டு சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது என்றும் சிறீ லங்கன் எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது.

## 126,379 சுற்றுலாவிகள் இந்த மாதத்தில் வருகை

கொழும்பு, செப். 29

இந்த மாதத்தில் இதுவரை ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 379 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின்படி,

இந்தியாவில் இருந்து மொத்தம் 37 ஆயிரத்து 179 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். ஐக்கிய இராச்சியத்திலிருந்து 8 ஆயிரத்து 937 பேரும் ஜேர்மனியிலிருந்து 7 ஆயிரத்து 799 பேரும் அவுஸ்திரேலியாவிலிருந்து 7 ஆயிரத்து 49 பேரும் சீனாவிலிருந்து 7 ஆயிரத்து 226 பேரும் இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

இதேசமயம், நாட்டுக்கு இந்த ஆண்டில் வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்து 92 ஆயிரத்து 902ஆக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 2029 வரையான தேர்தல்கள் மூலோபாய திட்டம் நவம்பரில்

கொழும்பு, செப். 29

2026 - 2029 தேர்தல்கள் தொடர்பான மூலோபாய திட்டம் நவம்பரில் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நுவரெலியா - ஹற்றனில் நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சமன் சிறீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

தற்போதைக்கு மாகாண சபைகள் தேர்தல், 2029ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் என்பன நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் குறித்த தேர்தல்கள் தொடர்பான மூலோபாயத் திட்டம் ஒன்றை தேர்தல்கள் ஆணைக்குழு தயாரித்துள்ளது. இந்த மூலோபாயத் திட்டம் எதிர்வரும் நவம்பரில் வெளியிடப்படும் - என்றார். (ஐ)

## விவாகரத்து நாட்டில் உயர்வு!

கொழும்பு, செப். 29

இலங்கையில் சுமார் 12 இலட்சம் குடும்பங்களுக்கு பெண்களே தலைமை தாங்குகின்றனர். விவாகரத்துகள் நாட்டில் அதிகரிப்பதால் இந்தக் குடும்பங்களின் எண்ணிக்கை சீராக உயர்ந்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனோஷா எதிரிசிங்க நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும், பெண்களின் நிதி நிலைத்தன்மையை வலுப்படுத்துவது அவர்களின் குடும்பங்களின் நல்வாழ்வுக்கும் பரந்த சமூகத்துக்கும் அத்தியாவசியமானது. எனவே, பெண்களுக்குப் பொருளாதார ரீதியாக அதிகாரம் அளிக்க வேண்டியதன் அவசர தேவை குறித்தும் சுட்டிக்காட்டினார். (ஐ)

## பாலியல் அடிப்படையிலான சுற்றுலா மேம்பாடு வேண்டாம்!

### நாமல் ராஜபக்ஷ வலியுறுத்து



கொழும்பு, செப். 29

நாட்டின் சுற்றுலா மேம்பாடு பாலின அடையாளம் அல்லது பாலியல் நாட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

நமது வளமான மற்றும் உண்மையான பாரம்பரியம் உலகெங்கிலும் இருந்து சுற்றுலாப் பயணிகளை அவர்களின் பாலின விருப்பங்களைப் பொருட்படுத்தாமல் ஈர்ப்பதற்குப் போதுமானது.

அரசாங்கம் இந்த முடிவை மறுபரிசீலனை செய்து, இத்தகைய உணர்வுபூர்வமான விடயங்களை மிகுந்த பொறுப்புடன் அணுகும் என்று நான் நம்புகிறேன்.

நமது நாடு ஏற்கனவே அதன் அழகு, கலாசாரம் மற்றும் பாரம்பரியம் காரணமாக ஒரு பிரபலமான சுற்றுலா தலமாக மாறியுள்ளது.

பார்வையாளர்களை ஈர்க்க நாம் பாலின அடையாளத்தில் கவனம் செலுத்தத் தேவையில்லை."- என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## 51 இலட்சம் தனிநபர்கள் சோதனையிடப்பட்டனர்

கொழும்பு, செப். 29

பொலிஸாரால் இந்த ஆண்டில் இதுவரையில் 51 இலட்சம் தனிநபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப். யூ. வூட்லர் தெரிவித்தார்.

மேலும், ஒரு இலட்சத்து 4 ஆயிரம் பேரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. 4 ஆயிரத்து 630 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 46 ஆயிரத்து 909 பேருக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, கவனக்குறைவாக வாகனம் செலுத்தியமை தொடர்பில் 3 ஆயிரத்து 404 வழக்குகளை தொடரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் சந்தேகநபர்கள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, 87 திட்டமிட்ட குற்றச் செயல்கள் இனங்காணப்பட்டு, அவற்றுடன் தொடர்புடைய 38 துப்பாக்கிதாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒத்துழைத்த 263 பேர் உட்பட 328 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ஐ)

## மின்சார சபையை பிரிக்கும் செயல்பாடு துரிதகதியில்!

கொழும்பு, செப். 29

இலங்கை மின்சார சபையை 4 நிறுவனங்களாகப் பிரிக்க அரசாங்கம் துரிதமாக செயல்பட்டு வருகிறது. இதன்படி, இந்த வாரம் ஒரு வரைவு "பூர்வாங்க பரிமாற்றத் திட்டம்" விநியோகிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் தற்போதைய செயல்பாடுகள், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் எவ்வாறு 4 நிறுவனங்களிடையேயும் பகிரப்படும் என்பதை விபரிக்கும்.

இலங்கை மின்சார சபை ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான சொத்துகளையும் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்களையும் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. தே. க. - ஐ. ம. ச. இணைவுக்கு தலைமை ஒரு பிரச்னையல்ல!

### நவீன் திஸநாயக்க சொல்கிறார்



கொழும்பு, செப். 29

ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவதற்கு தலைமை ஒரு பிரச்னையல்ல. இரு கட்சிகளின் தலைவர்களும் தலைமை பதவியை வகிக்க முடியும் என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் அனைத்து கட்சிகளும் இணைந்தால் வேறு எந்தவோர் அரசியல் சக்தியாலும் அதற்கு ஈடு கொடுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி, ஐ. தே. க. பிளவால் சுமார் 15 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்காமல் இருக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டால் இலகுவாக எமது வெற்றியை உறுதிப்படுத்தமுடியும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று ஞாயிறுக்கிழமை நடந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொடர்ந்தும் பேச்சுகள் நடக்கின்றன. ஏனைய கட்சிகளும் எம்முடன் இணைந்து செயல்பட இணக்கம் தெரிவித்துள்ளன. ஐக்கிய தேசிய கட்சியின் முகாமுக்குள் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைக்க முடியுமானால் அங்கிருந்து வெற்றிக்கான பயணத்தை ஆரம்பிக்க முடியும். ஐக்கிய தேசிய கட்சிக்கு மாத்திரம் சுமார் 40 இலட்சம் வாக்குகள் உள்ளன.

இந்த 40 இலட்சம் வாக்காளர்களையும் ஒரிடத்தில் ஒன்று சேர்க்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அதற்கான முயற்சிகளில் நானும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறேன்.

சகல ஐ.தே.க. ஆதரவாளர்களும் இதில் பங்கேற்க வேண்டும். தலைமைத்துவம் என்பது இங்கு பிரச்னையல்ல. எனவே, இரு கட்சிகளினதும் தலைவர்கள் அந்தப் பதவிகளை வகிக்க முடியும்.

உதாரணமாக மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட்டால் இந்த இரு கட்சிகளின் சார்பாகவும் பொது முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்க நான் தயாராக இருக்கின்றேன்.

எனவே, இணைந்து செயல்படுவதற்கான பல வழிகள் உள்ளன. இதனை நேர்மறையாக மாத்திரமே சிந்திக்க வேண்டும். மாறாக ஒரு சிறு விடயத்தைக்கூட எதிர்மறையான கோணத்தில் பார்க்கக் கூடாது. ஒருமித்த அழைப்பு விடுக்கப்படும் போது ஐ.தே.க. ஆதரவாளர்கள் அதனை ஏற்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.